# பாடநெறி வழிகாட்டி 2026

## மாகாண கல்வி நிலையம்




# கொழும்பு இறையியல் கல்லூரி

தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்

# கொழும்பு இறையியல் கல்லூரி

*தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்*

# பாடநெறி வழிகாட்டி 2026

## மாகாண கல்வி நிலையம்

இலங்கையிலும், அதற்கு அப்பாலும் திருச்சபை மற்றும் சந்தைவெளி எனப்படுகிற மதசார்பற்ற தொழில் ஸ்தாபனங்களிலும் விசுவாசிகளை திருச்சபைகளில் கிறிஸ்துவிற்கொப்பான தலைவர்களாக தயார்படுத்துவதற்காக இறையியல் கல்வியை வழங்குவதற்கு கொழும்பு இறையியல் கல்லூரியானது தன்னை அர்ப்பணித்துள்ளது.

கொழும்பு இறையியல் கல்லூரி என்பது, பல்தரப்பட்ட கிறிஸ்தவ பிரிவுகளை சேர்ந்த விசுவாசிகளின் மத்தியில் தொடர்புகளை ஏற்படுத்தவும், அவர்களது செழுமையான கிறிஸ்தவ மரபுகளை உணர்ந்து அறிந்துகொள்ளும் வாய்ப்பினையும் ஏற்படுத்தி தருகிற இறையியல் கல்லூரியாகும்.

கிறிஸ்தவ ஒற்றுமைக்கான கொழும்பு இறையியல் கல்லூரியின் அர்ப்பணிப்பானது பரிசுத்த வேதாகம அதிகாரத்தில் உறுதியாக வேரூன்றியுள்ளது: அது வேதாகமமே எமது விசுவாசத்திற்கும், வாழ்க்கைக்குமான இறுதியான வழிகாட்டி என்பதாகும்.

கொழும்பு இறையியல் கல்லூரியின் துடிப்பான கற்போர் சமூகத்துடன் இணைந்து கொண்டு விறுவிறுப்பான கற்றலின் பயணத்திலும் ஆவிக்குரிய வளர்ச்சியிலும் சுவிசேஷப்பணிக்கான பயன் தரக்கூடிய திறன்களை வளர்த்துக்கொள்வதிலும் பங்கெடுத்துக்கொள்ளுங்கள்.

**கொழும்பு இறையியல் கல்லூரியானது:**
**இலங்கை நாடாளுமன்றத்தின் 1971-ம் ஆண்டின் 32-ம் இலக்க சட்டத்தில் இணைக்கப்பட்ட**
**கொழும்பு வேதாகம கல்லூரியினது ஒரே பிரிவும்**
**இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணி (NCEASL) மற்றும்**
**இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் (NCCSL) ஆகியவைகளில் உறுப்புரிமை கொண்டது.**
**ஆசிய இறையியல் சங்கத்தின் (ATA) கல்விக்கான அங்கீகாரம் கொண்டது.**

# தொடர்பு கொள்வதற்கான தகவல்

| | |
|---|---|
| **மாகாண கல்வி பாடநெறிகள்** | extensions@cts.lk |
| **யாழ்ப்பாணம்** | +94 77 9177211<br>jaffna@cts.lk |
| **வவுனியா** | +94 76 9466882 |
| **மட்டக்களப்பு** | +94 77 0422317 |
| **இரத்தினபுரி** | +94 76 6368869 |
| **மாகாண கல்வி முகாமையாளர்**<br>திரு இரா. ஹரிஹரன் | haran@cts.lk |
| **கல்விப்பீடாதிபதி**<br>வணக்கத்திற்குரிய ரவின் கல்தேரா | ravin@cts.lk |

**+94 11 2890809 | www.cts.lk**

# உள்ளடக்கம்


| | *பக்கம்* |
|---|---|
| பொதுவான தகவல்கள் | 4 |
| நேர அட்டவணை | 6–11 |
| நேர அட்டவணை:<br>இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறி | 12 |
| பாடநெறி விவரணம் | 13–21 |
| இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறிகள் | 21–22 |
| பல்வளாக பாடநெறி | 23 |
| விரிவுரையாளர் விபரங்கள் | 24–29 |
| CTS பாடத்திட்டங்கள் | 30 |
| சிறுவர் ஊழிய களம் | 31–32 |

# பொதுவான தகவல்கள்

**CTS பாடநெறிகள்:**

- பொதுவாக கொழும்பு இறையியல் கல்லூரியின் மாகாண கல்வி நிலையங்களில் ஒரு பாடநெறியானது 4 நாட்களை கொண்டதாக மாதத்திற்கு ஒரு தடவை நடைபெறும்.

**கற்கை வழிமுறைகள்:**

- **நேர்நிலை கற்றல்:** பாடங்கள் CTS மாகாண கல்வி நிலையங்களில் நடைபெறும்.
- **நிகழ்நிலை கற்றல்:** Zoom வழியாக நடைபெறும் பாடங்கள். இங்கு பாடக்குறிப்புக்களை Moodle வழியாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கு செயற்திறனுடைய இணையத்தள வசதியும் டிஜிட்டல் சாதனமொன்றும் அவசியம்.
- **பல்வளாக பாடநெறி:** தொழில்நுட்ப உதவியுடன் CTS கல்வி நிலையங்களிலிருந்து நேர்நிலை கற்றலாக இப்பாடநெறியானது கற்பிக்கப்படும். இதன் மூலமாக வெவ்வேறு கல்வி நிலையங்களில் உள்ள மாணவர்கள் மெய்நிகர் வகுப்பறையில் ஒன்றிணைந்து கற்பதற்கு வழிவகுக்கிறது. இப்பாடநெறியானது வாரத்திற்கு ஒரு முறை நடைபெறும்.

**பாடக்கட்டணம்:**

ஒரு பாடத்திற்கு ரூபா 3,500/= தை முதல் அறவிடப்படும்.

* மிகவும் மானிய விலையில் இறையியல் கல்லூரியானது பாடநெறிகளை மாணவர்களுக்கு வழங்குவதற்கு; நமது ஊழிய பங்காளர்கள் மூலம் பெற்ற தாராளமான நிதியுதவிகளே ஏதுவாக அமைகிறது. இந்நன்கொடையை CTS நன்றியுடன் ஏற்றுக்கொள்வதோடு; இந்த விசேட ஏற்பாட்டிற்கு நல்ல உக்கிராணக்காரர்களாக மாணவர்கள் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**பாடநெறிக்கு பதிவு செய்யும் முறை:**

முன்பக்கத்தில் உள்ள CTS மாகாண கல்வி நிலையங்களின் ஒருங்கிணைப்பு அலுவலர்களை தொடர்பு கொள்வதற்கூடாக பாடத்திற்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

# நேர அட்டவணை
# 2026

| | யாழ்ப்பாணம் | வவுனியா | மட்டக்களப்பு | இரத்தினபுரி |
|---|---|---|---|---|
| தை - மாசி | **வழிபாடு பற்றிய இறையியல்**<br>தை 27-30<br>இரா. ஹரிஹரன்<br><br>**கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபம்**<br>மாசி 24-27<br>வி. கிறிஷாந்தி சந்ரசேகர் | **யாக்கோபு நிருபம்**<br>தை 20-23<br>ஜெயசீலன் ஜோயல் டிரோன்<br><br>**மேய்ப்பத்துவ நிருபங்கள்**<br>மாசி 10-13<br>கிறிஸ்துமணி செல்லையா | **கிறிஸ்தவ வரலாறு I**<br>தை 20-23<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர்<br><br>**சிறுவர் ஊழியம்**<br>மாசி 17-20<br>நிரஞ்ஜனி இராஜரட்ணம் | **திருச்சபை வளர்ச்சி**<br>தை 27-30<br>கே. யாபேஸ்<br><br>**பத்துக்கட்டளைகளின் இன்றைய பிரயோகங்கள்**<br>மாசி 24-27<br>இரா. ஹரிஹரன் |
| வாராந்திர பாடநெறி | **பல்வளாக பாடநெறி**<br>**இறையிலுக்கான அறிமுகம்**<br><br>புதன்<br>மு.ப.9:00-பி.ப.12:45<br>11 வாரங்கள்<br>ஆரம்பம்: தை 7<br><br>ஜூலியன் தேவதாசன் | **பல்வளாக பாடநெறி**<br>**இறையிலுக்கான அறிமுகம்**<br><br>புதன்<br>மு.ப.9:00-பி.ப.12:45<br>11 வாரங்கள்<br>ஆரம்பம்: தை 7<br><br>ஜூலியன் தேவதாசன் | **பல்வளாக பாடநெறி**<br>**இறையிலுக்கான அறிமுகம்**<br><br>புதன்<br>மு.ப.9:00-பி.ப.12:45<br>11 வாரங்கள்<br>ஆரம்பம்: தை 7<br><br>ஜூலியன் தேவதாசன் | |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடநெறிக்குரிய குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

| | யாழ்ப்பாணம் | வவுனியா | மட்டக்களப்பு | இரத்தினபுரி |
|---|---|---|---|---|
| பங்குனி - சித்திரை | **கிறிஸ்தவ வரலாறு III**<br>பங்குனி 24-27<br>குத்தீன் மனோகர்<br><br>**புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்**<br>சித்திரை 27-30<br>மகேஸ்வரன் மாணிக்கராஜா | **தேவனும் உலகமும்**<br>பங்குனி 10-13<br>இரா. ஹரிஹரன்<br><br>**பணமும், உடமைகளும், இராஜ்யமும்**<br>சித்திரை 14-17<br>குமார் சுப்ரமணியம் | **வேதாகம அறநெறி**<br>பங்குனி 24-27<br>இரா. ஹரிஹரன்<br><br>**கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் திருமணம்**<br>சித்திரை 27-30<br>மோகன் இதயகுமார் அழகக்கோன் | **சீஷத்துவம்**<br>பங்குனி 26-29<br>கிறிஸ்துமணி செல்லையா<br><br>**சீஷர்களை உருவாக்குதல்**<br>சித்திரை 27-30<br>சிவராஜசிங்கம் ஜெயராஜ் |
| வாராந்திர பாடநெறி | **பல்வளாக பாடநெறி**<br>**இறையிலுக்கான அறிமுகம்**<br><br>புதன்<br>மு.ப.9:00-பி.ப.12:45<br>11 வாரங்கள்<br>ஆரம்பம்: தை 7<br><br>ஜுலியன் தேவதாசன் | **பல்வளாக பாடநெறி**<br>**இறையிலுக்கான அறிமுகம்**<br><br>புதன்<br>மு.ப.9:00-பி.ப.12:45<br>11 வாரங்கள்<br>ஆரம்பம்: தை 7<br><br>ஜுலியன் தேவதாசன் | **பல்வளாக பாடநெறி**<br>**இறையிலுக்கான அறிமுகம்**<br><br>புதன்<br>மு.ப.9:00-பி.ப.12:45<br>11 வாரங்கள்<br>ஆரம்பம்: தை 7<br><br>ஜுலியன் தேவதாசன் | |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடநெறியை குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

| | யாழ்ப்பாணம் | வவுனியா | மட்டக்களப்பு | இரத்தினபுரி |
| --- | --- | --- | --- | --- |
| வைகாசி - ஆனி | **மேய்ப்பத்துவ நிருபங்கள்**<br>வைகாசி 12-15<br>கிறிஸ்துமணி செல்லையா<br><br>**வேதாகம அறநெறி**<br>**ஆனி** 23-26<br>இரா. ஹரிஹரன் | **ஆமோஸ் தீர்க்கதரிசியின் நூல்**<br>வைகாசி 12-15<br>வனஜா ராஜ்குமார்<br><br>**கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்**<br>**ஆனி** 9-12<br>கிறிஸ்ரி பாலேந்திரன் | **வேதாகம விளக்கவுரை**<br>வைகாசி 19-22<br>இரா. ஹரிஹரன்<br><br>**இலங்கை திருச்சபை வரலாறு**<br>**ஆனி** 16-19<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | **கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபம்**<br>வைகாசி 24-27<br>வி. கிறிஷாந்தி சந்ரசேகர்<br><br>**1, 2 இராஜாக்கள்**<br>**ஆனி** 23-26<br>வனஜா ராஜ்குமார் |
| வாராந்திர பாடநெறி | **பல்வளாக பாடநெறி**<br>**சிறுவர்நல ஆற்றுப்பணி**<br>திங்கள்<br>மு.ப.9:00-மு.ப.11:45<br>11 வாரங்கள்<br>ஆரம்பம்: வைகாசி 11<br>நிவேதிதா ஜீவபாலன் | **பல்வளாக பாடநெறி**<br>**சிறுவர்நல ஆற்றுப்பணி**<br>திங்கள்<br>மு.ப.9:00-மு.ப.11:45<br>11 வாரங்கள்<br>ஆரம்பம்: வைகாசி 11<br>நிவேதிதா ஜீவபாலன் | **பல்வளாக பாடநெறி**<br>**சிறுவர்நல ஆற்றுப்பணி**<br>திங்கள்<br>மு.ப.9:00-மு.ப.11:45<br>11 வாரங்கள்<br>ஆரம்பம்: வைகாசி 11<br>நிவேதிதா ஜீவபாலன் | |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடநெறிக்குரிய குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

| | யாழ்ப்பாணம் | வவுனியா | மட்டக்களப்பு | இரத்தினபுரி |
|---|---|---|---|---|
| ஆடி - ஆவணி | **பழைய ஏற்பாட்டிற்கான பின்னணி**<br>ஆடி 14-17<br>ஜேசன் செல்வராஜா<br><br>**திருச்சபை மாதிரிகள்**<br>ஆடி 21-24<br>நெப்போலியன் பத்மநாதன்<br><br>**பணமும், உடமைகளும், இராஜ்யமும்**<br>ஆவணி 18-21<br>குமார் சுப்ரமணியம் | **கிறிஸ்தவ வரலாறு I**<br>ஆடி 14-17<br>குத்தீன் மனோகர்<br><br>**வாலிபர் ஊழியம்**<br>ஆவணி 11-14<br>மோகன் இதயகுமார்<br>அழகக்கோன் \|<br>அரிதாஸ் தேவானந் | **யோவான் எழுதிய சுவிசேஷம்**<br>ஆடி 21-24<br>ஜெயசீலன் ஜோயல் டிரோன்<br><br>**பரிசுத்த ஆவியானவரின் ஆட்தத்துவமும் செயற்பாடும்**<br>ஆவணி 18-21<br>கிறிஸ்துமணி செல்லையா | **கிறிஸ்தவ வரலாறு I**<br>ஆடி 28-31<br>ஜோன் பெனடிக்ட்<br><br>**கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தொடர்பாடல்**<br>ஆவணி 18-21<br>காமினி ஜயந்த |
| வாராந்திர பாடநெறி | **பல்வளாக பாடநெறி**<br>**சிறுவர்நல ஆற்றுப்பணி**<br><br>திங்கள்<br>மு.ப.9:00-மு.ப.11:45<br>11 வாரங்கள்<br>ஆரம்பம்: வைகாசி 11<br><br>நிவேதிதா ஜீவபாலன் | **பல்வளாக பாடநெறி**<br>**சிறுவர்நல ஆற்றுப்பணி**<br><br>திங்கள்<br>மு.ப.9:00-மு.ப.11:45<br>11 வாரங்கள்<br>ஆரம்பம்: வைகாசி 11<br><br>நிவேதிதா ஜீவபாலன் | **பல்வளாக பாடநெறி**<br>**சிறுவர்நல ஆற்றுப்பணி**<br><br>திங்கள்<br>மு.ப.9:00-மு.ப.11:45<br>11 வாரங்கள்<br>ஆரம்பம்: வைகாசி 11<br><br>நிவேதிதா ஜீவபாலன் | |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடநெறிக்குரிய குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

| | யாழ்ப்பாணம் | வவுனியா | மட்டக்களப்பு | இரத்தினபுரி |
|---|---|---|---|---|
| புரட்டாசி - ஐப்பசி | **திருத்தூதுப்பணியியல் தொடர்பான பிரச்சினைகள்**<br>புரட்டாசி 8-11<br>கிறிஸ்டி சாமுவேல் | **பழைய ஏற்பாட்டிற்கான அறிமுகம்**<br>புரட்டாசி 15-18<br>வனஜா ராஜ்குமார் | **வாலிபர் ஊழியம்**<br>புரட்டாசி 15-18<br>மோகன் இதயகுமார் அழகக்கோன் \|<br>அரிதாஸ் தேவானந் | **வேதாகம சமாதானப்பணி**<br>புரட்டாசி 22-25<br>ஜேசன் செல்வராஜா |
| | **விடுதலை மற்றும் சமத்துவம் தொடர்பான பிரச்சினைகள்**<br>ஐப்பசி 13-16<br>கிறிஸ்டி சாமுவேல் | **கிறிஸ்தவ வரலாறு II**<br>ஐப்பசி 13-16<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | **திருத்தூதுப்பணியியல் தொடர்பான பிரச்சினைகள்**<br>ஐப்பசி 20-23<br>கிறிஸ்டி சாமுவேல் | **மேய்ப்பத்துவ நிருபங்கள்**<br>ஐப்பசி 27-30<br>ஜெயசீலன் ஜோயல் டிரோன் |
| வாராந்திர பாடநெறி | **பல்வளாக பாடநெறி**<br>**கிறிஸ்துவின் ஆட்தத்துவமும் செயற்பாடும்**<br>வியாழன்<br>மு.ப.9:00-பி.ப.12:20<br>13 வாரங்கள்<br>ஆரம்பம்: புரட்டாசி 3<br>ஜூலியன் தேவதாசன் | **பல்வளாக பாடநெறி**<br>**கிறிஸ்துவின் ஆட்தத்துவமும் செயற்பாடும்**<br>வியாழன்<br>மு.ப.9:00-பி.ப.12:20<br>13 வாரங்கள்<br>ஆரம்பம்: புரட்டாசி 3<br>ஜூலியன் தேவதாசன் | **பல்வளாக பாடநெறி**<br>**கிறிஸ்துவின் ஆட்தத்துவமும் செயற்பாடும்**<br>வியாழன்<br>மு.ப.9:00-பி.ப.12:20<br>13 வாரங்கள்<br>ஆரம்பம்: புரட்டாசி 3<br>ஜூலியன் தேவதாசன் | |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடநெறி குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

| | யாழ்ப்பாணம் | வவுனியா | மட்டக்களப்பு | இரத்தினபுரி |
|---|---|---|---|---|
| கார்த்திகை - மார்கழி | **துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவருக்கான ஊழியம்**<br>கார்த்திகை 10-13<br>நிரஞ்ஜனி இராஜரட்ணம்<br><br>**பாலியல் பற்றிய அறநெறி**<br>மார்கழி 1-4<br>கிறிஸ்ரி பாலேந்திரன் | **வேதாகம அறநெறி**<br>கார்த்திகை 10-13<br>இரா. ஹரிஹரன்<br><br>**சீஷத்துவம்**<br>மார்கழி 1-4<br>ப. காந்தன் | **கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தொடர்பாடல்**<br>கார்த்திகை 17-20<br>காமினி ஜயந்த<br><br>**திருச்சபை வளர்ச்சி**<br>மார்கழி 1-4<br>ஜேசன் செல்வராஜா | **ஏனைய மதத்தினருடன் தொடர்புகொள்ளுதல்**<br>மார்கழி 1-4<br>காமினி ஜயந்த |
| வாராந்திர பாடநெறி | **பல்வளாக பாடநெறி**<br>**கிறிஸ்துவின் ஆட்தத்துவமும் செயற்பாடும்**<br>வியாழன்<br>மு.ப.9:00-பி.ப.12:20<br>13 வாரங்கள்<br>ஆரம்பம்: புரட்டாசி 3<br>ஜுலியன் தேவதாசன் | **பல்வளாக பாடநெறி**<br>**கிறிஸ்துவின் ஆட்தத்துவமும் செயற்பாடும்**<br>வியாழன்<br>மு.ப.9:00-பி.ப.12:20<br>13 வாரங்கள்<br>ஆரம்பம்: புரட்டாசி 3<br>ஜுலியன் தேவதாசன் | **பல்வளாக பாடநெறி**<br>**கிறிஸ்துவின் ஆட்தத்துவமும் செயற்பாடும்**<br>வியாழன்<br>மு.ப.9:00-பி.ப.12:20<br>13 வாரங்கள்<br>ஆரம்பம்: புரட்டாசி 3<br>ஜுலியன் தேவதாசன் | |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடநெறிக்குரிய குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## நேர அட்டவணை: இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறிகள்

| நேரம் | தவணை 1 | தவணை 2 | தவணை 3 |
|---|---|---|---|
| மாலை | **வேதாகம விளக்கவியல்**<br>புதன்<br>பி.ப.5:30-பி.ப.9.30<br>11 வாரங்கள்<br>ஆரம்பம்: தை 7<br>குமார் சுப்ரமணியம் | **திருப்பணிக்கான அறநெறி**<br>வெள்ளி<br>பி.ப.6:00-பி.ப.9:30<br>13 வாரங்கள்<br>ஆரம்பம்: வைகாசி 8<br>இரா. ஹரிஹரன் | **சமகால கருத்தியல்கள்**<br>புதன்<br>பி.ப.6:00-பி.ப.9:30<br>13 வாரங்கள்<br>ஆரம்பம்: புரட்டாசி 2<br>ஜூலியன் தேவதாசன் |
| | | | **தலைமைத்துவ மாதிரிகள்**<br>வெள்ளி<br>பி.ப.6:00-பி.ப.9:30<br>13 வாரங்கள்<br>ஆரம்பம்: புரட்டாசி 4<br>கிறிஸ்துமணி செல்லையா |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடநெறி குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# பாடநெறி விவரணம்
## நேர்நிலை கற்றல்

## வழிபாடு பற்றிய இறையியல் திறமை அளவு: 2

தற்கால சபையானது ஆராதனை மீது அதீத நாட்டமுள்ளதாயிருக்கிறது. கர்த்தரை கனப்படுத்தும் ஆராதனையை குறித்து வேதாகமம் எதனை கற்பிக்கிறது? இப்பாடநெறியானது காயீன், ஆபேலின் ஆராதனையிலிருந்து, பழைய ஏற்பாட்டு பலி ஆராதனை, இஸ்ரவேலின் சங்கீதங்களின் பின்னணியில் புதிய ஏற்பாட்டு ஆராதனையையும் நடைமுறைகளையும் புரிந்துகொள்ள உதவும். வேதாகம கோட்பாடுகளின் அடிப்படையில் உங்களது ஸ்தல சபையின் ஆராதனையை மதிப்பீடு செய்ய இப்பாடநெறியானது உதவி செய்யும்.

## கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபம் திறமை அளவு: 2

இந்நிருபத்தினை புரிந்து கொள்வதில் கிறிஸ்தவர்களும், திருச்சபைகளும் பெரும் சவால்களை இன்றைய காலத்திலும் எதிர்நோக்குகின்றனர். கொரிந்து திருச்சபையில் காணப்பட்ட திருச்சபை பிளவு, ஒழுக்க, கலாச்சார ரீதியான பிரச்சினைகள், விவாகரத்து, ஆவிக்குரிய கொடைகள் போன்ற பல பிரச்சனைகளுக்கான தீர்வின் படிப்பினைகளை இன்றைய சமகால திருச்சபைகளுக்கு முன்வைக்கிறதாக இப்பாடநெறியானது அமைகிறது.

## யாக்கோபு நிருபம் திறமை அளவு: 2

சிறிதான இந்நிருபம் நடைமுறை வாழ்க்கை பிரச்சினைகளை குறித்த ஆழமான பார்வையை கொண்டது. கிறிஸ்தவனின் வாழ்க்கையின் உண்மையான நிலையை எச்சரித்து மெய்யான கடவுள் பக்தி, விசுவாசம், ஞானத்துடனான கிறிஸ்தவ வாழ்வை திருச்சபையிலும், தனிப்பட்ட ரீதியிலும் நடைமுறைப்படுத்தவும், முதிர்ச்சிக்கும், போதிப்பதற்கும் இப்பாடநெறியானது வழிகாட்டுகின்றது.

## திருச்சபை வளர்ச்சி திறமை அளவு: 2

திருச்சபை என்பது உயிருள்ள சரீரத்தை போன்றதாகும். சரியான போஷாக்கையும், பராமரிப்பையும் வழங்குவதன் மூலமே அது ஆரோக்கியமாக வளர முடியும். இப்பாடநெறியானது, உங்கள் திருச்சபையின் ஆன்மீக ஆரோக்கியத்தையும், வளர்ச்சி தடைகளையும் கண்டறிந்து, வேதாகம, நடைமுறை கோட்பாடுகளின் மூலம் உங்கள் திருச்சபையை தரிசனமுள்ள, ஆற்றல் மிக்க, பெருகும் சரீரமாக மாற்றுவதற்கான மூலோபாய வழிகாட்டுதலை வழங்குகிறது.

## வேதாகம சமாதானப்பணி

திறமை அளவு: 2

மனிதர்களிடையே முரண்பாடுகள் நாளாந்தம் ஏற்படுகின்றதொரு விடயமாகும். அதேவேளையில் தேசிய, உலகளாவிய முரண்பாடுகள் கிறிஸ்தவர்களின் அவதானத்தை கோருகின்றது. இப்பின்னணியில் கிறிஸ்து எம்மை சமாதானமாக்குகிறவர்களாக செயற்பட தயாராக இருக்கும்படி கூறுகின்றார். வேதாகம சமாதானமாக்குதல் பிரச்சினைகளின் மூலங்களை ஆராய்ந்தறிந்து அதற்கு எவ்வாறான பிரதியுத்தரம் கொடுக்கப்பட வேண்டும், பிரச்சனைகளை தீர்க்க எடுக்கப்படும் வழிமுறைகள் என்பவற்றை ஆராய்வதுடன் மன்னிப்பளிப்பதில் இருக்கும் சவால்களிற்கும் முகம் கொடுக்க உதவும்.

## மேய்ப்பத்துவ நிருபங்கள்

திறமை அளவு: 2

இப்பாடநெறியானது பவுலின் தீமோத்தேயு, தீத்து, பிலேமோன் நிருபங்களை ஆராய்கிறது. சபை தலைவர்களுக்கான பவுலின் கரிசனை மிகுந்த அறிவுறுத்தல்களை இந்நிருபங்களில் புரிந்து கொள்ளலாம். இதிலுள்ள சத்தியங்கள் இன்றைய தலைவர்களுக்கு திருச்சபையின் ஊழியத்தின் தரத்தை மேம்படுத்தி அதை வழிநடத்துவதற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

## கிறிஸ்தவ வரலாறு I
(கி.பி. 100 - கி.பி. 1517)

திறமை அளவு: 2

திருச்சபையின் ஆரம்பம் முதல் சீர்திருத்தம் வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கிய இப்பாடநெறியானது குறிப்பிடப்படுகிற இக்காலப்பகுதியில் திருச்சபையானது விரிவடைந்த விதங்கள், அதை வடிவமைத்த இறையியல்கள், திருச்சபை பிதாக்கள், இரத்தசாட்சிகள், துறவிகள், அருட்பணியாளர்கள், கிறிஸ்தவ இயக்கங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது.

## சிறுவர் ஊழியம்

திறமை அளவு: 2

சிறுவர்களை எதிர்கால சபையின் அங்கத்தினர்களாக எண்ண வேண்டாம். அவர்கள் இன்றைய சபையின் அங்கத்தினர்கள் சிறுவர்களின் நம்பிக்கையையும் நடைமுறை வாழ்வையும் உதாசீனம் செய்யும் ஒரு உலகில் சிறுவர்கள் தன்னம்பிக்கையுடன் இயேசுவை நம்பி பின்பற்ற வேண்டும். இப்பாடநெறியானது ஆசிரியர்கள் சவாலுடன் இந்த தேவையை நிறைவேற்ற அவர்களை ஆயத்தப்படுத்தி, எதிர்கால சந்ததி வேதாகமத்தை ஆவலுடன் கற்று, வாழ்வில் மாற்றத்துடன் இயேசுவை பின்பற்ற உதவி செய்யும்.

## பத்துக்கட்டளைகளின் இன்றைய பிரயோகங்கள் திறமை அளவு: 2

பழைய ஏற்பாட்டிலே சமூக வாழ்விற்கான அடித்தளத்தை பத்து கட்டளைகளே அமைத்தது. தற்காலத்தில் அப்படிப்பட்ட கட்டளைகள் எவ்வாறு பொருந்துகின்றது? ஒரு தீவிர, வித்தியாசமான சமூகமாக இருப்பதற்கு எவ்வகையில் இக்கட்டளைகள் எமக்கு சவாலிடுகின்றன? சிலை வழிபாட்டின் அபாயம், ஓய்வு நாளின் நோக்கம், ஆரோக்கிமான குடும்ப உறவுகள் போன்ற அநேக விடயங்களை நீங்கள் கலந்துரையாடுவது மாத்திரமன்றி இருபத்தோராம் நூற்றாண்டில் இக்கட்டளைகளை எவ்வாறு வாழ்க்கைக்கு பிரயோகிக்கலாம் என்பதனையும் கற்றுக்கொள்வீர்கள்.

## கிறிஸ்தவ வரலாறு III
(19 - 21-ம் நூற்றாண்டுகள்) திறமை அளவு: 2

“தனது சரித்திரத்தை அறியாத ஒரு சமூகம் ஞாபகமற்ற ஒரு மனிதனுக்கு சமம்”. சரித்திரத்தில் சபை கண்ட வெற்றிகளையும் தோல்விகளையும், தேவனின் செயற்பாட்டையும் கிறிஸ்தவர்கள் அறிந்திருப்பது அவசியமானது. இப்பாடநெறியானது 1800 இலிருந்து இன்று வரையான காலப்பகுதியின் திருச்சபையின் செயற்பாட்டையும் முன்னேற்றத்தையும் ஆராய்கின்றது.

## புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம் திறமை அளவு: 2

புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்பதை கற்றுக்கொள்வதோடு ஒவ்வொரு புத்தகத்தினதும் எழுத்தாளர், முக்கிய செய்தி, கட்டமைப்பு, பிரதான கருப்பொருட்கள், சரித்திர பின்னணி மற்றும் தனித்துவங்களை குறித்து சிறந்த கண்ணோட்டத்தை பெற்றுக்கொள்ள இப்பாடநெறியானது துணை புரியும்.

## தேவனும் உலகமும் திறமை அளவு: 2

இப்பாடநெறியானது சமகால வாதங்கள், கிறிஸ்தவ சிந்தனையின் வரலாறு ஆகியவற்றை கிறிஸ்தவ அடிப்படையின் வெளிச்சத்தில் ஆராய்கிறதுடன் முறைப்படுத்தப்பட்ட இறையியல் ஆய்விற்கான அறிமுகமாகவும் காணப்படுகிறது. ஆண்டவருடைய குணாதிசயங்களும் அவருடைய தன்மைகளும், உலகம், மனிதனின் படைப்பு மற்றும் வீழ்ச்சி ஆகிய முக்கிய கருப்பொருள்களை வேதாகமத்தின் அடிப்படையில் புரிந்துகொள்ளும் ஓர் இறையியல் முயற்சியாகும்.

## பணமும், உடமைகளும், இராஜ்யமும் திறமை அளவு: 2

இப்பாடமானது பணம், பொருட்கள் மீதான ஆசை, சேமிப்பு, முதலீடு செய்தல், கடன் வாங்குதல், செழிப்பின் உபதேசம், துறவறம் மற்றும் பரலோக வெகுமதிகள் போன்ற நடைமுறை விடயங்களுடன் தொடர்புடைய அநேக வேதாகம பகுதிகளை ஆராய்ந்து, கிறிஸ்தவ உக்கிராணத்துவத்தை குறித்த வேதாகம கண்ணோட்டத்தை தருகிறது.

| வேதாகம அறநெறி | திறமை அளவு: 2 |
|---|---|
| கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் குணாதிசயத்தை பிரதிபலித்து உலகிற்கு உப்பாகவும், ஒளியாகவும் திகழ அழைக்கப்பட்டவர்கள். இப்பாடநெறியானது அறநெறி சார்ந்த நடைமுறை கேள்விகளை ஆராய்ந்து, வேதாகம அறநெறி கோட்பாடுகளின் அடிப்படையில் வாழ்க்கையின் ஒவ்வொரு தெரிவுகளையும் செயல்களையும் இன்றைய கால நடைமுறை வாழ்க்கையில் பிரயோகித்து கிறிஸ்துவை பிரதிபலிப்பதற்கு வழிகாட்டியாக அமையும். | |

| வாலிபர் ஊழியம் | திறமை அளவு: 2 |
|---|---|
| கடவுளுடைய மாபெரும் கட்டளையானது உலகம் முழுவதும் தலைமுறையாக நீடித்து செல்ல வேண்டியதொன்றாகும். உலகமயமாக்கலின் மத்தியில் வாலிபர்கள் இலகுவாக திசை மாறி செல்பவர்களாக இருந்தாலும், அவர்களின் குரலும் சக்தியும் மனித சமுதாயத்தின் தன்மையை புரட்சிகரமாக மாற்றக்கூடியதாகவும் உள்ளது. இப்பாடநெறியானது வாலிபர்களின் ஆற்றல்கள், இளமைப்பருவத்தின் சவால்களை புரிந்து 14 முதல் 21 வயதுடையவர்கள் மத்தியில் நற்செய்தி அறிவிப்பு, சீஷராக்குதல் போன்ற விடயங்களை ஏற்படுத்துவதை ஆராய்கிறது. | |

| சீஷர்களை உருவாக்குதல் | திறமை அளவு: 2 |
|---|---|
| கிறிஸ்து விசுவாசிகளையல்ல, சீஷர்களையே உருவாக்கும்படி கட்டளையிட்டார். கிறிஸ்துவின் மாபெரும் கட்டளையை நிறைவேற்ற விரும்பும் ஒவ்வொருக்கும் உதவக்கூடிய இப்பாடநெறியில் சுவிசேஷத்தை ஒருவர் ஏற்றுக்கொள்ளும்போது செய்யப்பட வேண்டிய பின்தொடர்பணிகள் எவை? அவற்றை எவ்வாறு செய்ய வேண்டும்? கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒருவர் கிறிஸ்துவை பின்பற்றுபவராக, பிரதிபலிப்பவராக மாற எவ்வாறு உதவி செய்ய முடியுமென ஆராயப்படும். | |

| கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தொடர்பாடல் | திறமை அளவு: 2 |
|---|---|
| செய்தி பரிமாற்றம் ஒரு உயர்ந்த நிலையில் இருக்கும் இக்காலத்தில், தகவல் பரிமாற்றம் அத்தியாவசியமான மதிநுட்பமுள்ளதாக இருக்கின்றது. தம்மை வார்த்தையின் ஊடாக வெளிப்படுத்திய தேவனை ஆராதிக்கும் விசுவாசிகளாகிய நாம் செய்தி பரிமாற்றத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். மனிதர் மத்தியில் உருவாகும் பிரச்சினைகளுக்கு காரணம் தகவல் பரிமாற்றத்தில் தேர்ச்சின்மையேயாகும். இப்பாடநெறி தகவல் பரிமாற்ற வழிகளை ஆராய்ந்து உங்களுடைய தகவல் பரிமாற்றும் தன்மையை சுவிசேஷ ஊழியத்திலும், தனிப்பட்ட உறவுகளிலும், தொழில் செய்யுமிடத்திலும் சிறப்பிக்கும். | |

## கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் திருமணம் திறமை அளவு: 2

கிறிஸ்தவ வாழ்வின் முக்கிய தீர்மானங்களில் ஒன்று திருமணம். இப்பாடநெறி திருமணத்தை குறித்த வேதாகம கண்ணோட்டத்தை புரிந்துகொள்ள உதவும் அதேநேரம் திருமண உறவுக்குள் பாலியல், சிநேகம், வகிபங்கு, பொறுப்புகள் போன்ற விடயங்கள் ஆராயப்படுவதோடு, தம்பதிகள் முகம் கொடுக்கும் சவால்களான நிதி நிர்வாகம், பிள்ளைகளற்ற நிலை, துஷ்பிரயோகிக்கும் துணை, நம்பிக்கைத்துரோகம், விவாகரத்து போன்ற விடயங்களும் ஆராயப்படும்.

## ஆமோஸ் தீர்க்கதரிசியின் நூல் திறமை அளவு: 2

வரையறையில்லாத ஊழல், அநீதி, வன்முறைகள் என பல விடயங்களிற்கு எம்முடைய சமுதாயம் முகம் கொடுக்கின்றது. இந்நிலையில் தேவனுக்கு கனத்தை கொடுக்கத்தக்கதாக, சமுதாயத்தை மாற்றும் விதமாக எவ்வாறு மாறுத்தரத்தினை அளிப்பது? ஆமோஸின் வார்த்தைகள் இவ்விதமான சமகால பிரச்சனைகளிற்கு அற்புதமான விதத்தில் பொருத்தமானதாக அமைகிறது. இப்பாடநெறியானது நீங்கள் செல்வாக்கு செலுத்தக்கூடிய வட்டாரத்திற்குள் ஞானமாக சிந்திப்பதற்கும், இருப்பதற்கும், செயற்படுவதற்கும் வழிகாட்டியாக அமைகிறது.

## கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல் திறமை அளவு: 2

“உலக நோக்கு என்பது ஒரு ஜோடி கண்ணாடிகளை போன்றது. அது நாம் பார்ப்பதையல்ல, அதனூடாக பார்ப்பதையே குறிக்கிறது” (போல் ஹிபேர்ட்). கிறிஸ்தவ சிந்தனைக்கூடாக எம்முடைய சிந்தனைகளையும் மனப்பான்மையையும் மதிப்பீடு செய்வதன் முக்கியத்துவத்தை இப்பாடநெறியானது ஆராய்கின்றது. உங்கள் தெரிவுகளும் நீங்கள் எடுக்கும் முடிவுகளும் உலகத்திற்கு ஒத்ததாக இருக்காமல் அதிலிருந்து விடுதலை பெறவும், உங்களில் ஆழமான மாற்றம் ஏற்படவும் இது வழிவகுக்கும் என்பது நிச்சயம்.

## வேதாகம விளக்கவுரை திறமை அளவு: 2

ஒவ்வொரு சந்ததியிற்கும் நிரந்தரமான தேவனின் வார்த்தையே வேதாகமம் என கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர். ஆகவே நாம் சத்திய வசனத்தை சரியான வகையிலே கையாள வேண்டும் என்பது பாரியதொரு சவாலாகும். வேதாகம விளக்கவுரை வேதாகமத்தில் உள்ள வித்தியாசமான மொழி நடைகளை, அதாவது கவிதை, தீர்க்கதரிசனம், கதை, சட்டம் ஆகியவற்றை விளக்குவதற்கான கோட்பாடுகளை மாணவர்களிற்கு கற்றுத்தரும்.

## இலங்கை திருச்சபை வரலாறு

திறமை அளவு: 2

இலங்கையில் கிறிஸ்தவ மரபுரிமையின் மதிப்பை உணர்ந்து கொள்ள அபூர்வமானதொரு தருணம். இப்பாடநெறிக்கூடாக இலங்கையில் கிறிஸ்தவம் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதல் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர், அமெரிக்க திருத்தூதுப்பணியாளர்கள் போன்றோருடைய செயற்பாடுகளை அவதானிப்பதன் ஊடாக தற்போது இலங்கையிலுள்ள சபையின் பல விதமான அமைப்புகள் எவ்வாறு உருவானது என்பதை குறித்தும் அறியக்கூடியதாக இருக்கும்.

## சீஷத்துவம்

திறமை அளவு: 2

### 21-ம் நூற்றாண்டில் கிறிஸ்துவின் வழியை பின்பற்றுவது எப்படி?

சீஷன் என்பவன் யார்? அவனுடைய குணாதிசயங்கள், அவன் எதிர்கொள்ளும் சவால்கள், ஆவிக்குரிய போராட்டங்கள், அவற்றை மேற்கொள்ளும் முறைகள் போன்ற விடயங்களை இப்பாடநெறியில் ஆராய்வதுடன், கிறிஸ்தவ ஆவிக்குரிய வாழ்வின் முக்கியத்துவத்தையும் ஒவ்வொரு சீஷனுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவுகின்ற முக்கிய காரணிகளை குறித்தும் ஆராயப்படும்.

## 1, 2 இராஜாக்கள்

திறமை அளவு: 2

முடியாட்சியின் எழுச்சியும், தோல்வியும், இராஜாக்களின் வரலாறுகள் மற்றும் இஸ்ரவேலரின் சரித்திரத்திற்கு அப்பாற்பட்ட அநேக விடயங்கள் இப்பகுதியில் அடங்கியிருக்கிறது. தேவன் எவ்விதம் இஸ்ரவேலருடன் பேசினார் என்பதையும், தலைமைத்துவம், விக்கிரக ஆராதனை, வன்முறை, தீர்க்கதரிசன பணிகளின் ஆரம்பம், கடவுளுடைய இராஜ்யத்திற்கு மக்கள் வழிநடத்தப்பட்ட விதம் என்பவற்றையும் இப்பாடநெறியில் கற்றுக்கொள்ளலாம்.

## யோவான் எழுதிய சுவிசேஷம்

திறமை அளவு: 2

“ஒரு பிள்ளை நீந்தக்கூடியதும், யானை நீந்தக்கூடியதுமான ஒரு குளமே யோவானின் சுவிசேஷம்” (லியோன் மொரிஸ்). சுவிசேஷத்தை வழங்கும் இந்த தனித்துவம் மிகு முறையில், யோவான் எமக்கு வரலாற்று ரீதியான இயேசுவை குறித்தும், அவரின் போதனைகளை குறித்தும் விலைமதிப்பற்ற அறிவை தருவதை காணலாம். முக்கியமான கிறிஸ்தவ கொள்கைகளை ஆராய்கின்ற அதேவேளை, யோவான் சீஷத்துவதிற்கான ஒரு உறுதியான அழைப்பை விடுக்கின்றார்.

## பழைய ஏற்பாட்டிற்கான பின்னணி

திறமை அளவு: 2

பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் உள்ள பெறுமதியான, அழகான பின்னணியை இப்பாடநெறிக்கூடாக விளங்கிக்கொள்வதோடு, பண்டைய கிழக்கிற்கு அருகாமையின் கலாச்சாரம், மதம், வரலாறு போன்றவற்றை ஆய்வு செய்து, பழைய ஏற்பாட்டினை, புதிய வடிவில் கற்றுக்கொள்வதற்கு உதவுகிறது.

## பரிசுத்த ஆவியானவரின் ஆட்தத்துவமும் செயற்பாடும்

திறமை அளவு: 2

கடந்த நூற்றாண்டுகளாக பரிசுத்த ஆவியானவரை குறித்த கலந்துரையாடல், அதற்கு முன் வந்த நூற்றாண்டுகளை விட மிக அதிகமாக காணப்படுகின்றது. வேதாகமம் பரிசுத்த ஆவியானவரை குறித்து என்ன போதிக்கின்றது, பரிசுத்த ஆவியானவரை குறித்த கோட்பாடுகள் எவ்வாறு கடந்த நூற்றாண்டுகளினூடாக வளர்ச்சியடைந்தன என்பவற்றை குறித்து கற்றுக்கொள்ள வாருங்கள். விசுவாசியின் வாழ்க்கையில் அவருடைய தனித்துவமான செயலையும் சபையில் அவரது வல்லமையுள்ள பிரசன்னத்தையும் குறித்த ஆழமான அறிவை பெறுவதற்கு இப்பாடநெறியானது உதவியாக அமையும்!

## திருத்தூதுப்பணியியல் தொடர்பான பிரச்சினைகள்

திறமை அளவு: 2

திருத்தூதுப்பணி என்பது வேதாகமம் முழுவதும் பரந்து காணப்படும் ஒரு தலைப்பாகும். இவ்வுலகை குறித்த கடவுளின் நோக்கம் ஆதியாகமம் 1-ம் அதிகாரத்திலும், மீட்பை குறித்த திட்டம் 3-ம் அதிகாரத்திலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. திருத்தூதுப்பணியின் கருப்பொருளுக்கான தேடலில் ஆபிரகாமின் அழைப்பு, இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்ட திருத்தூதுப்பணிக்கான ஆணை, இயேசுவும் திருத்தூதுப்பணியும், அப்போஸ்தலர் நடபடிகளில் திருத்தூதுப்பணி போன்றனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## பழைய ஏற்பாட்டிற்கான அறிமுகம்

திறமை அளவு: 2

பழைய ஏற்பாட்டை புரிந்து கொள்வது கடினமாக உள்ளதா? கவலை வேண்டாம்! இப்பாடநெறியானது பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு புத்தகத்தினதும் ஆசிரியர், செய்தி, கட்டமைப்பு, பிரதான கருப்பொருட்கள் மற்றும் வரலாற்று சூழ்நிலை ஆகியவற்றை குறித்து சிறந்த கண்ணோட்டத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள துணை புரியும். இயேசு கிறிஸ்துவின் கைகளில் தவழ்ந்த வேதாகமத்தில் உள்ளடங்கியிருந்த பல வகைப்பட்ட புத்தகங்களின் பெறுமதியை உணரவும் அனுபவிக்கவும் இப்பாடநெறியானது உதவியாக அமையும்.

## கிறிஸ்தவ வரலாறு II
## (கி.பி. 1517 - கி.பி. 1900)

திறமை அளவு: 2

சீர்திருத்தம் முதல் (1517) நவீன திருத்தூதுப்பணி இயக்கங்கள் (1900) வரையிலான காலகட்டத்தில் மேற்கத்தேய திருச்சபை வரலாற்றின் மாபெரும் சீர்திருத்தவாதிகள், மதிநுட்பமுள்ள இறையியலாளர்கள், பெருங்கூட்ட சுவிசேஷகர்கள், உலக தூதுப்பணி இயக்கங்கள் ஆகியவர்களால் திருச்சபையில் ஏற்பட்ட பரம்பல், தாக்கங்களை இப்பாடநெறியானது ஆராய்வதோடு, வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய முக்கிய பாடங்களை, ஆரோக்கியமான திருச்சபை வாழ்வை நோக்கி பிரயோகிப்பதற்கும் உதவி செய்யும்.

## துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவருக்கான ஊழியம்

திறமை அளவு: 2

இலங்கையில் சிறுவர் தொடர்பான விழிப்புணர்வானது மிகவும் மந்தமாகவே உள்ளது. கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களில் சிறுவர்கள் அநாவசியமாக தமது உயிர்களை இழந்தமையை நமக்கு காணக்கூடியதாக இருக்கிறது. சிறுவர் துஷ்பிரயோகம் இன்று சமூதாயத்தில் பிரபலமான பாரிய பிரச்சனையாகும். அரச கணிப்பீட்டின்படி ஒரு நாளைக்கு ஒரு பிள்ளை வீதம் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றனர். அவ்வாறான சிறுவர்களுக்கு எவ்வாறு ஊழியம் செய்வது என்பதை குறித்து இப்பாடநெறியானது உதவி செய்கிறது.

## பாலியல் பற்றிய அறநெறி

திறமை அளவு: 2

மானிட பாலியலை குறித்த பல்வேறு பிரச்சினைகளை வேதாகம கண்ணோட்டத்தில் இப்பாடநெறியானது ஆய்வு செய்யும். இப்பாடநெறியில் பாலியலை குறித்த வேதாகம கண்ணோட்டத்துக்கு விளக்கமளித்து, பாலினம், பாலியல் அபிலாசைகள், பாலியல் வரம்புகள் அத்துடன் ஆபாச படங்களுக்கு அடிமையாதல் குறித்த பிரச்சினைகள் ஆராயப்பட்டு ஆரோக்கியமான பாலியல் உறவை மேம்படுத்துவதில் அவதானம் செலுத்துகிறது.

## ஏனைய மதத்தினருடன் தொடர்புகொள்ளுதல்

திறமை அளவு: 2

ஏனைய மதங்களையும், அவைகளின் தனித்துவமான கலாச்சார பின்னணியையும் விளங்கிக்கொள்ள முற்படுவோமாயின், இலங்கையில் உள்ள கிறிஸ்தவர்களாகிய நாம் நான்கு முக்கிய மதங்களிற்கு வாழ்விடமாக இருக்கும் சமூகத்தில் பலனளிக்கும் வகையில் வாழக்கூடியதாக இருக்கும். பௌத்தம், இந்து, இஸ்லாம் போன்ற மதங்களின் அடிப்படை போதனைகளை அறிந்து கொள்ளவும், அவர்களுடன் கௌரவத்துடன் உரையாடவும் இப்பாடநெறியினூடாக கற்றுக்கொள்ளுங்கள். ஒப்புரவாகிய இலங்கையை கட்டியெழுப்புவதற்கு நீங்கள் எவ்வாறு பங்காற்றலாம் என்பதனை அறிந்து கொள்ளுங்கள்.

## விடுதலை மற்றும் சமத்துவம் தொடர்பான பிரச்சினைகள்

திறமை அளவு: 2

சமகால சமூதாயத்தில் நீதி மற்றும் சமாதானம் குறித்த வேதாகம, இறையியல், நெறிமுறை சார்ந்த கண்ணோட்டங்களை இப்பாடநெறியானது ஆராய்கிறது. இங்கு மாணவர்கள் வறுமை, முரண்பாடுகள், மனித உரிமைகள், நல்லிணக்கம் போன்ற உலகளாவிய மற்றும் உள்ளூர் சவால்களை ஆராயும் அதேவேளை, விடய ஆய்வுகள், வாசிப்புகள் மற்றும் நடைமுறை பிரயோகங்களின் மூலம் அநீதியை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்து, சமாதானம், கண்ணியம், சமூக மாற்றத்தை விருத்தி செய்யக்கூடிய விசுவாசத்தில்-நங்கூரமிடப்பட்ட தீர்வினை உருவாக்க மாணவர்களை ஆயத்தப்படுத்துகிறார்கள்.

# இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறிகள்

## நேர்நிலை கற்றல்

இக்கருத்தரங்குகளுக்கு பதிவு செய்வதற்கு நீங்கள் இளமாணி அல்லது முதுமாணி பட்டப்படிப்பின் மாணவராக பதிவு செய்திருக்க வேண்டும். அல்லது அதற்கு சமமான/ அதற்கு மேலான பட்டத்தை பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

இறையியல் இளமாணி பட்டத்திற்கு பதிவு செய்தவர், ஆகக்குறைந்தது 60 திறமை அளவினை பூர்த்தி செய்த மாணவராக இருத்தல் வேண்டும்.

## திருச்சபை மாதிரிகள்

திறமை அளவு: 3

திருச்சபை மாதிரிகளை பற்றியதான இப்பாடநெறியில் சபை மாதிரிகளின் சரித்திர, இறையியல் கண்ணோட்டத்தை ஆழமாகவும் விரிவாகவும் கற்றுக்கொள்வதோடு, சபை மாதிரிகள் பின்பற்றும் சாக்கிரமந்துகள் (திருவருட்சாதனங்கள்), ஆராதனை முறைமைகள், சபையின் ஆளுகை முறைகளை மதிப்பாய்வு செய்து கற்றுக்கொள்ளுவதற்கான அரிய வாய்ப்பினையும் வழங்குகிறது.

## நிகழ்நிலை கற்றல்

## வேதாகம விளக்கவியல்

இக்கருத்தரங்கில் பங்குபற்றுபவர் வேதாகம விமர்சனத்திற்கான வித்தியாசமான அணுகுமுறைகளை குறித்து விழிப்புணர்வை பெறுவதுடன் வேதாகமத்தின் வேறுபட்ட இலக்கிய தன்மைகளை புரிந்து கொள்ளவும் கூடிய வாய்ப்பையும் பெறுவார். அதன் மூலம் வேதாகம வியாக்கியானத்திற்கான புலமை வாய்ந்த அணுகுமுறைகளை கொண்டு வேதாகமத்தின் புதையல்களை கண்டறிவதற்கு கற்றுக்கொள்வர்.

**BTh கட்டாயம்**

11 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.5:30-9.30

ஆரம்பம்: தை 7

திறமை அளவு: 3

விரிவுரையாளர்:
**குமார் சுப்ரமணியம்**

# இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறிகள்
## நிகழ்நிலை கற்றல்

### திருப்பணிக்கான அறநெறி

BTh கட்டாயம்

பணம், பாலியல், அதிகாரம் தொடர்பான பிரச்சனைகள் ஆண்டாண்டு காலமாக கிறிஸ்தவ சமுதாயங்களின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக காணப்பட்டது. இன்றும் அவை திருச்சபையை பலமாக தாக்குகின்றது. இப்பாடநெறியானது பணம், பாலியல், அதிகாரம் தொடர்பான ஆபத்துக்களை குறித்த விழிப்புணர்ச்சியை அதிகரிப்பதுடன், எவ்வாறு இக்கொடைகளை துஷ்பிரயோகம் செய்யாதபடி கிறிஸ்தவ ஊழியத்தை பாதுகாத்துக்கொள்ளக்கூடிய பொறிமுறைகளை உருவாக்கவும், நடைமுறைப்படுத்தவும், பேணவும் முடியும் என்பதை கற்றுக்கொள்ளவும் துணை புரியும்.

13 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: பி.ப.6:00-9:30

ஆரம்பம்: வைகாசி 8

திறமை அளவு: 3

விரிவுரையாளர்:
**இரா. ஹரிஹரன்**

### சமகால கருத்தியல்கள்

BTh கட்டாயம்

கருத்தியல்கள் மக்கள் சிந்திக்கும் விதத்தையும், வாழ்க்கை முறையையும் வடிவமைக்கின்றன. இவ்வாறான வலுவான பிடிமாணங்களை கருத்திற்கொள்ளாமல் சுவிசேஷத்தை தாக்கமுள்ள விதத்தில் அறிவிக்க முடியாது. இக்கருத்தரங்கில் இலங்கை சமூகத்தை வடிவமைத்த மார்க்ஸிசம், பின்நவீனத்துவம், இனரீதியான தேசியவாதம், ஜனரஞ்சகமான உளவியல் போன்ற முக்கிய கருத்தியல்களின் தோற்றமும் செல்வாக்கும் ஆராயப்படும்.

13 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.6:00-9:30

ஆரம்பம்: புரட்டாசி 2

திறமை அளவு: 3

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

### தலைமைத்துவ மாதிரிகள்

BTh கட்டாயம்

தலைமைத்துவமானது பல்வேறுபட்ட பாணிகளில் செயற்படுகின்றது என்ற உண்மையை கண்டறியுங்கள். தரிசனமுள்ள, முகாமைத்துவ, மேய்ப்பத்துவ, குழுவை கட்டியெழுப்பும், தொழிற்துறை தலைவர்கள் போன்ற பலவகைப்பட்ட தலைவர்களை நாம் காணலாம். நீங்கள் எப்படிப்பட்ட தலைவர்? ஏனைய தலைமைத்துவ பாணிகளை கொண்ட தலைவர்கள் உங்கள் குழுவிற்கு ஏன் அவசியம்? நாம் சேவை செய்யும் மக்களுக்கு நன்மையளிக்கும் விதத்தில் அவர்கள் எவ்வாறு ஒன்றிணைந்து செயலாற்ற முடியும்? போன்ற முக்கிய கேள்விகள் இப்பாடநெறியில் அலசி ஆராயப்படும்.

13 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: பி.ப.6:00-9:30

ஆரம்பம்: புரட்டாசி 4

திறமை அளவு: 3

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

# பல்வளாக பாடநெறிகள்
## நேர்நிலை கற்றல்

### இறையியலுக்கான அறிமுகம்
**கிறிஸ்தவ அடிப்படை விசுவாச கோட்பாடுகள்**

எங்கள் விசுவாசமே எங்கள் வாழ்க்கையை தீர்மானிக்கும்! நாம் எதனை விசுவாசிக்கிறோம் என்பது நம்மில் பலருக்கு தெரிந்திருந்தாலும், அநேகர் அதனை தெளிவாக அறியாதிருக்கின்றார்கள். நீங்கள் கிறிஸ்தவ கோட்பாடுகளை மற்றொருவருக்கு விளக்க ஆரம்பித்து இறுதியில் தடுமாறும் நிலைக்கு ஆளாகியிருக்கிறீர்களா? இப்பாடநெறியானது கிறிஸ்தவ கோட்பாடுகளை குறித்து தெளிவான விளக்கத்தை தருவதோடு மற்றவர்களுக்கு அதனை நம்பிக்கையுடன் விளக்கவும் உதவி செய்யும்.

**BTh|Dip கட்டாயம்**

11 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12.45

ஆரம்பம்: தை 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

### சிறுவர்நல ஆற்றுப்பணி

சிறுவர்களை எதிர்கால சபையின் அங்கத்தினர்களாக எண்ண வேண்டாம். அவர்கள் இன்றைய திருச்சபையின் அங்கத்தினர்கள். சிறுவர்களின் நம்பிக்கையையும் நடைமுறை வாழ்வையும் உதாசீனம் செய்யும் ஒரு உலகில் சிறுவர்கள் தன்னம்பிக்கையுடன் இயேசுவை நம்பி பின்பற்ற வேண்டும். இப்பாடநெறியானது ஆசிரியர்கள் சவாலுடன் இந்த தேவையை நிறைவேற்ற அவர்களை ஆயத்தப்படுத்தி, எதிர்கால சந்ததி வேதாகமத்தை ஆவலுடன் கற்று, வாழ்வில் மாற்றத்துடன் இயேசுவை பின்பற்ற உதவி செய்யும்.

**BTh|Dip விருப்பு**
**COUN கட்டாயம்**

11 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: மு.ப.9:00-11:45

ஆரம்பம்: வைகாசி 11

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**நிவேதிதா ஜீவபாலன்**

### கிறிஸ்துவின் ஆட்தத்துவமும் செயற்பாடும்

திருச்சபை வரலாறில் பல இறையியலாளர்கள் கிறிஸ்துவின் தெய்வீக, மனுஷீகம் தொடர்பான கேள்விகளுக்கான பதிலை பல நூற்றாண்டுகளாக விபரிக்க முயற்சித்துள்ளனர். கிறிஸ்துவை குறித்தும், அவரது பண்புகள், குணாதிசயங்கள், தேவனோடு அவருக்குள்ள தெய்வீக உறவு, பழைய, புதிய ஏற்பாட்டில் அவரது செயற்பாடுகள், இன்றைய திருச்சபைகளில், கிறிஸ்தவர்களது வாழ்வில் அவர் செயற்படுகிறார் போன்றவற்றிற்கான விளக்கங்கள் இப்பாடநெறியில் ஆராயப்படும்.

**BTh|Dip கட்டாயம்**

13 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:20

ஆரம்பம்: புரட்டாசி 3

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

# விரிவுரையாளர் விபரங்கள்



**செல்லதுரை ஜோ. சந்ரசேகர்,** BTh, MSW (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், பல வருடங்களாக அதன் முழுநேர கல்விப்பீட உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். கொரிய சர்வதேச இறையியல் கல்லூரியில் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கிறிஸ்தவம் என்ற பாடநெறியில் சான்றிதழை பெற்றவர். வத்தளை, சீயோன்மலை கூடார திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் தலைமை போதகருமாவார். அத்துடன் தேசிய கிறிஸ்தவ ஊழியர்களின் ஐக்கியத்தின் பொதுச்செயலாளராகவும் கடமையாற்றுகிறார்.



**இரா. ஹரிஹரன்,** BTh, MMin
**கொழும்பு இறையியல் கல்லூரியின் மாகாண கல்வி நிலையங்களின் முகாமையாளரான இவர்,** சிங்கப்பூர் திரித்துவ இறையியல் கல்லூரியில் இளமாணி, முதுமாணி பட்டங்களை பெற்றவருமாவார். மிக நீண்ட காலமாக இளைஞர் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். வெள்ளவத்தை மூர் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**வனஜா ராஜ்குமார்,** BTh, MCS
**கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினரான இவர், கல்லூரியின் உதவி நூலகவியலாளராகவும், இறையியலுக்கான தமிழ்மொழி செம்மையாளராகவும் பணியாற்றுகிறார்.** பெண்கள் மற்றும் சிறுவர் ஊழியங்களில் ஈடுபட்டு வருவதுடன், இலங்கை வேதாகம சங்கத்தின் ‘Master Facilitator in Healing the Wounds of Trauma Children’ பயிற்சியை பெற்றவரும், “தாயின் வடிவமைப்பு” என்பதின் சிரேஷ்ட வளவாளருமாவார். இவர், கொழும்பு-13, ஜிந்துப்பிட்டி, புனித தோமாவின் ஆலயத்தினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**கிறிஸ்துமணி செல்லையா,** DipEng (Mech), BTh, MA, MDiv
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் Campus Crusade நிறுவனத்தின் பல்கலைக்கழக ஊழியத்தின் நிதி முகாமையாளராகவும், திருச்சபை ஸ்தாபித்தல் இயக்கத்தின் இணைப்பாளராகவும் கடமையாற்றி உள்ளார். நீண்ட காலமாக முழுநேரப்பணியில் ஈடுபட்டு வரும் இவர் தற்பொழுது இரட்சணியசேனை திருச்சபையின் கல்வி இணைப்பாளராகவும், சபைகளில் சீஷத்துவ பயிற்சியளித்தல், கற்பித்தல், பிரசங்கித்தல், வேதாகம கல்லூரிகளில் கற்பித்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். கொழும்பு, கொம்பனித்தெரு, இரட்சணியசேனை திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.


# விரிவுரையாளர் விபரங்கள்



**கிறிஸ்ரி பாலேந்திரன்,** Certificate in Counselling CWR-UK, BD
இவர் சேராம்பூர் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியும், சர்வதேச வேதாகம கழகத்தின் இலங்கைக்கான இயக்குனருமாவார். கற்பித்தல் பணியில் நீண்ட கால அனுபவமுடையவரும், பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் மூர் வீதியிலுள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**ஜூலியன் தேவதாசன்,** BTh, MDiv, MTh (candidate)
**கொழும்பு இறையியல் கல்லூரியின் உதவி கல்விப்பீடாதிபதியான** இவர் தெற்காசிய இறையியல் கல்லூரி (SAIT, இலங்கை), இறையியல் கற்கைகள் மற்றும் திருத்தூதுப்பணிக்கான ஆசிய மையம் (ACTS, தென் கொரியா) ஆகியவற்றின் பட்டதாரியுமாவார். தற்போது தென்னாபிரிக்க இறையியல் கல்லூரியில் இறையியலில் முதுமாணி பட்டப்படிப்பினை மேற்கொண்டு வருகிறார். கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகள் (Ambassdors for Christ International) என்ற சர்வதேச அமைப்பின் ஊழிய உறுப்பினராகவும், கருக்கலைப்பிலிருந்து மீண்டு உயிர்வாழ்பவர்களின் வலையமைப்பின் (Abortion Survivors Network) சர்வதேச கருக்காப்பிற்கான (Pro-Life) பேச்சாளராகவும் திகழ்கின்றார். சிலாபம், புனித யாக்கோபின் திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**காமினி ஜயந்த,** BTh, MSW (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும், Ragama, Thuduwegedera இலுள்ள Prayer Tower Church-ல் துணை போதகராகவும், தனது ஆராதிக்கும் சபையாகவும் கொண்டுள்ளதுடன், தற்போது Infinity Centre for Higher Studies (இலங்கை)-ன் முழு இலங்கைக்குமான நிர்வாக ஒருங்கிணைப்பாளராக கடமையாற்றுகிறார். அத்துடன் இலங்கையில் பல பாகங்களுக்கும் சென்று வேதாகம பாடங்களையும், பிரசங்கங்களையும் மேற்கொள்வதுடன், போதைப்பொருட்களுக்கு அடிமையாயுள்ளவர்களை புனரமைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளார்.



**கே. யாபேஸ்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் AOG திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாகவும், அதன் போதகராகவும் பணியாற்றுவதுடன், திருச்சபைகளில் கற்பித்தல், பிரசங்கித்தல் தலைமைத்துவ பயிற்சியளித்தல், வேதாகம கல்லூரியில் கற்பித்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**கிறிஸ்டி சாமுவேல்,** EPCM, BE, MA
Mission to Asia (இந்தியா), Infinity Centre for Higher Studies (இலங்கை) ஆகியவற்றின் ஸ்தாபக இயக்குனராவார். இந்தியாவின், எம்.கே பல்கலைக்கழகம் (கணணி விஞ்ஞான தொழிநுட்பவியல் [BE]), புனித. பவுல் இறையியல் கல்லூரி (பிரயோக இறையியலில் முதுமாணி), மார்ட்டின் லூத்தர் பல்கலைக்கழகம் (கிறிஸ்தவ முகாமைத்துவ பாடநெறி) போன்றவற்றில் பட்டம் பெற்றவராவார். தெற்காசியாவின் பல்தரப்பட்ட திருத்தூதுப்பணி செயற்பாடு அமைப்புகளின் உறுப்பினரும், இலங்கையில் தகவல் தொழில்நுட்ப கைத்தொழில் அமைப்பு நிர்வாகக்குழுவின் அங்கத்தவருமாவார் (கல்விப்பிரிவு). வெள்ளவத்தை, மூர் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொணடுள்ளார்.



**மகேஸ்வரன் மாணிக்கராஜா,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் கொழும்பு, மக்கள் தேவ சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் போதகராகவும் பணியாற்றி வருகின்றார்.



**வி. கிறிஷாந்தி சந்ரசேகர்,** Dip (Counselling), BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும், சமூக அபிவிருத்தி தேசிய நிறுவனத்தின் (National Institute of Social Development) ஆற்றுப்பணியில் டிப்ளோமாவினை பெற்றவருமான இவர், குடும்பங்கள் மத்தியிலே ஆற்றுப்பணியிலே ஈடுபட்டு வருகிறார். தெமட்டகொட, கிரேஸ் வேதாகம நிறுவனத்தின் வேதாகம கல்வி ஆசிரியராக பணியாற்றியுள்ளார். வத்தளை, சீயோன்மலை கூடார திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் நிர்வாக சபையின் காரியதரிசியாகவும், ஞாயிறு பாடசாலை கண்காணிப்பாளராகவும் சேவையாற்றி வருகிறார்.



**நிவேதித்தா ஜீவபாலன்,** BA (Psy)
ஆலோசனைப்பணியில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறந்த அனுபவமுள்ள விசேட மனநல நிபுணர் ஆவார். சிறுவர் மற்றும் வயது வந்தோருக்கு ஆலோசனை வழங்குவதில் சிறந்து விளங்குகிறார். ஆலோசகர்களை பயிற்றுவித்து அவர்களை மேற்பார்வை செய்துள்ளதுடன், இலங்கையில் மனநலம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு முயற்சிகளுக்கு பெருமளவான பங்களிப்பினை வழங்கியுள்ளார். இவர் வெள்ளவத்தையிலுள்ள கொழும்பு சுவிசேஷ கூடார சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**மோகன் இதயகுமார் அழகக்கோன்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், கிறிஸ்துவுக்காக இளைஞர் இயக்கத்தில் பயிற்சி நிர்வாக இயக்குனராகவும், சப்பிரகமுவா, களுத்துறை பிரிவுகளுக்கு ஊழிய பொறுப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார். கடந்த 30 ஆண்டுகளாக யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, கொழும்பு பகுதிகளில் இளைஞர்கள் மத்தியில் ஊழியம் செய்வதுடன் இளம் தலைவர்களுக்கு பயிற்சி கொடுப்பவராகவும் பணியாற்றுகிறார். இவர் வெள்ளவத்தை, மூர் வீதியிலுள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**குமார் சுப்ரமணியம்,** BTh, MA, MDiv, DMin (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரி, அமெரிக்காவின் கென்டாக்கி மாநிலத்திலுள்ள ஏஸ்பரி இறையியல் கல்லூரி ஆகியவற்றின் பட்டதாரியான இவர், தற்போது ஊழியத்துறையியலில் முனைவர் (DMin) பட்டப்படிப்பினை மேற்கொண்டு வருகிறார். இவர் பல வருடங்களாக கொழும்பு இறையியல் கல்லூரியின் முழுநேர கல்விப்பீட உறுப்பினராகவும், பிரயோகப்பயிற்சி, ஆவிக்குரிய உருவாக்கத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். கறுவாத்தோட்ட பெப்டிஸ்ட் திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்ட இவர் 25 ஆண்டுகளுக்கு மேல் அத்திருச்சபையில் சிறுவர், பதின்வயதினர், வாலிபர், தம்பதியினர் மற்றும் போதக ஊழியங்களில் தலைமைத்துவ பங்களிப்பை மும்மொழிகளிலும் வழங்கி தற்போது இணை போதகராக பணியாற்றி வருகின்றார்.



**நிரஞ்ஜனி இராஜரட்ணம்,** HND (Counselling), BTh, MSc (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் பகுதி நேர கல்விப்பீட உறுப்பினரான இவர், இக்கல்லூரியின் இளமாணி பட்டதாரியுமாவார். தற்போது மருத்துவ உளவியல் முதுமாணி பட்டப்படிப்பினை கற்றுக்கொண்டிருக்கிறார். World Vision Sri Lanka நிறுவனத்தில் 15 ஆண்டுகளுக்கு மேலாகவும், The Salvation Army Sri Lanka தலைமையகத்தில், சிறுவர் நிகழ்ச்சி திட்டங்கள் தொடர்பான அறிவுரை ஆலோசகராகவும் மற்றும் Wesley College-ல் மாணவ ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். Child Rights Activistஆக இருப்பதுடன், திருச்சபைகள் மற்றும் கிறிஸ்தவ நிறுவனங்களுடன் இணைந்து ஆலோசகராக பணிபுரிந்து வருகின்றார்.



**குத்தீன் மனோகர்,** BTh, MDiv
42 வருடங்களாக கிருபை சுவிசேஷ சபையின் போதகராக பணியாற்றி வரும் இவர், பால்டேயஸ் இறையியல் கல்லூரியின் முன்னாள் அதிபரும், இலங்கை வேதாகம கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளரும், சபை சரித்திரம், சபை ஆட்சியமைப்பு மற்றும் கருவறை கொலைகள் ஆகிய புத்தகங்களின் ஆசிரியருமாவார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**ஜெயசீலன் ஜோயல் டிரோன்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், ஐந்து வருடங்களுக்கு மேலாக தனியார் பெருநிறுவனங்களில் நிதி மற்றும் நிர்வாக துறையில் தொழில் புரிந்தவருமாவார். அநேக வருடங்களாக கொழும்பு சுவிசேஷ கூடார சபையின் வாலிபர் ஐக்கியத்தின் தலைவராகவும் போதகர் குழுவின் அங்கத்தவராகவும் பணிபுரிந்துள்ளார். தற்போது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிறிஸ்துவின் ஜெபவீடு திருச்சபையின் உதவி போதகராகவும், ஆசிரியராகவும் பணியாற்றுகிறார்.



**சிவராஜசிங்கம் ஜெயராஜ்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் கிறிஸ்துவுக்காக இளைஞர் பணியில் 26 வருட பணி அனுபவத்தோடு பல புதிய பிரதேசங்களில் ஊழியங்களை ஆரம்பிக்க தேவனால் தற்போது வரை பயன்படுத்தபடுகின்ற பாத்திரம் ஆவார். தற்போது இலங்கை சிறைச்சாலைகள் ஐக்கிய ஊழியத்தின் தேசிய இயக்குனராக பணியாற்றுகிறார். இவர் மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**நெப்போலியன் பத்மநாதன்,** BTh, MTh, PhD
கொழும்பு இறையியல் கல்லூரியின் இணைக்கல்வியின் முன்னாள் முகாமையாளராகவும் கல்விப்பீட உறுப்பினராகவும் பணியாற்றிய இவர் இக்கல்லூரியின் பட்டதாரியுமாவார். ஐக்கிய இராஜ்ஜிய வேல்ஸ் தேசத்து Glamorgan பல்கலைக்கழக முதுமாணி பட்டத்தை பெற்ற இவர், தற்போது கற்பித்தல் மற்றும் பிரசங்க பணியில் ஈடுபட்டு வருகிறார். காலிமுகம், கிறிஸ்துநாதர் ஆலயத்தினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**ஜேசன் செல்வராஜா,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் முன்னாள் கல்விப்பீட உறுப்பினரான இவர், AOG கைதடி சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் தலைமை போதகராகவும் சேவையாற்றுகிறார். அத்துடன் “Simply Mobilizing SL” இன் தேசிய இணைப்புக்குழுவின் அங்கத்தவராகவும், சிவில் உரிமை அமைப்பாகிய யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் அங்கத்தவருமாவார்.



**ப. காந்தன்,** BTh, MSW
கொழும்பு இறையியல் கல்லூரியின் இளமாணி பட்டதாரியான இவர், தேசிய சமூக நிறுவனத்தில் உளவளத்துணை பட்டச்சான்றிதழினையும் நிறைவு செய்து, தற்போது சமூகப்பணிக்கான முதுமாணியினை தொடர்கின்றார். 20 வருடங்களாக கிறிஸ்துவுக்காக இளைஞர் இயக்கத்தில் பணியாளராகவும் தேவனின் பணியை தொடர்கின்றார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**அரிதாஸ் தேவானந்,** BTh, MCS
கொழும்பு இறையியல் கல்லூரியின் இளமாணி பட்டதாரியும், யாழ் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவக்கல்வியில் முதுமாணி பட்டதாரியுமான இவர், கிறிஸ்துவுக்கான வாலிபர் இயக்கத்தின் பிராந்திய தலைவராக பணியாற்றி வருகிறார். வாலிபர் மத்தியில் கற்பித்தல், ஆற்றுப்பணிகளில் ஈடுபட்டு வரும் இவர் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**ஜோன் பெனடிக்ட்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், கொழும்பிலுள்ள Word God Ministries திருச்சபையின் தலைமை போதகராகவும், வேதாகம கல்வி ஆசிரியராகவும் பணியாற்றுகிறார். அனேக திருச்சபைகளில் கற்பித்தல், பிரசங்கித்தல் பணிகளில் ஈடுபடுவதுடன், பதின்ம வயதினர் மற்றும் வாலிபர்கள் மத்தியிலும் பணியாற்றி வருகிறார்.

# CTS பாடத்திட்டங்கள்

நீங்கள் உங்களது தனிப்பட்ட விருப்பத்தின்படி பாடநெறிகளை தெரிவு செய்தாலும்கூட, ஆகக்கூடிய பயனை பெற்றுத்தரக்கூடிய வகையில் கொழும்பு இறையியல் கல்லூரி வழங்கும் ஒரு பாடத்திட்டத்திற்கு உங்களை பதிவு செய்து கொள்ளுவதை குறித்து சிந்திக்கும்படி நாம் உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

கொழும்பு இறையியல் கல்லூரி நான்கு மட்டங்களில் பாடத்திட்டங்களை வழங்குகின்றது. இவையனைத்தும் ஆசிய இறையியல் சங்கத்தினால் (Asia Theological Association) அங்கீகரிக்கப்பட்டவையாகும். உங்களுக்கு அதிகளவு பயனை தரக்கூடிய பாடநெறி எதுவென்பதை கண்டறியுங்கள்:

**கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ் (CCS)**
இது வாழ்க்கை பயணம், தொழில் மற்றும் ஊழியம் ஆகியவற்றிற்கு 21-ம் நூற்றாண்டிலுள்ள கிறிஸ்தவர்களை ஆயத்தப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
*தேவைப்படும் திறமை அளவுகள் : 36*

**இறையியலில் டிப்ளோமா (DipTh)**
இது கிறிஸ்தவ ஊழியர்கள் ஊழியத்திற்கு தேவையான ஆழமான வேதாகம அறிவு மற்றும் செயற்திறன்களை, பெற்றுக்கொண்டு தங்களை ஆயத்தப்படுத்தும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
*தேவைப்படும் திறமை அளவுகள்: 72*

**இறையியலில் இளமாணி (BTh)**
இது கிறிஸ்தவர்களை சபையின் தலைமைத்துவத்திற்கு (மேய்ப்பத்துவம், கற்பித்தல் அல்லது அது போன்ற ஏனைய ஊழியங்கள்) பயிற்றுவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
*தேவைப்படும் திறமை அளவுகள்: 108*

**மேலதிக தகவல்கள் மற்றும் உதவிக்கு தொடர்பு கொள்க:**
கல்விசார் காரியாலயம் 011-2890809; extensions@cts.lk

# கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்
# சிறுவர் ஊழிய களம்

**பாட நெறிகள்:**

- வாரத்திற்கு இரண்டு தடவை 3 மணிநேர அமர்வுகள் நடைபெறும்.
  - ஒவ்வொரு திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை மாலை 6.00 முதல் மாலை 9.00 வரை
- ஒவ்வொரு திறமை அளவும் 2 மணித்தியாலங்களை உள்ளடக்கியுள்ளது.
- மாணவர்களால் இரண்டு ஆண்டுகளில் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இந்த பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

| | பாடங்கள் | திறமை அளவு |
|---|---|---|
| கட்டாய பாடங்கள் | | |
| வேதாகமம் மற்றும் இறையியல் பாடங்கள் | 04 | 08 |
| சிறுவர் ஊழிய பாடங்கள் | 04 | 08 |
| விருப்புப்பாடங்கள் | 10 | 20 |
| கருத்தரங்குகள் | 04 | 00 |
| மொத்தம் | 22 | 36 |

கவனிக்கப்பட வேண்டியது: சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு மேலே உள்ள அனைத்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

**பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும் முறைகள்:**

**நிகழ்நிலை:** Zoom வழியாக பாடங்கள் நடைபெறும். இங்கு பாடக்குறிப்புக்களை Moodle வழியாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கு செயற்திறனுடைய இணையத்தள வசதியும் டிஜிட்டல் சாதனமொன்றும் அவசியம்.

**மேலதிக தகவல்களுக்கான தொடர்பு:**

திருமதி. கிறிஷ்ணி எதிரிசிங்க
ஒருங்கிணைப்பாளர் : சிறுவர் ஊழிய களம்
+94 764823127
cm@cts.lk

# கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்
# சிறுவர் ஊழிய களம்

**கட்டாயம்: வேதாகமம் மற்றும் இறையியல் பாடங்கள்**

சிறுவர்கள் குறித்த வேதாகம கண்ணோட்டம்
இறையியலுக்கான அறிமுகம்
புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்
கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்

**கட்டாயம்: சிறுவர் ஊழிய பாடங்கள்**

பரிபூரணமான சிறுவர் அபிவிருத்தி
சிறுவர்களுக்கு வேதாகமத்தை கற்பித்தல்
சிறுவர், திருச்சபை மற்றும் திருத்தூதுப்பணி
சிறுவர் பணியில் அறநெறிகள்

**விருப்புப்பாடங்கள்**

துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுவர்களுக்கான பணி
வாலிபர் ஊழியம்
பராமரிப்பாளரின் ஆவிக்குரிய உருவாக்கம் மற்றும் மன அழுத்தத்திற்கான முகாமைத்துவம்
கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தொடர்பாடல்
கிறிஸ்தவ பிள்ளை வளர்ப்பு
சிறுவர்களுக்கான சீஷத்துவம்
உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்
ஆபத்திலிருக்கும் சிறுவர்கள் மீதான திருச்சபையின் பங்கு
கலாச்சாரத்தினை புரிந்து கொள்ளல்
சிறுவர் ஆற்றுப்பணி

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் சிறுவர் ஊழிய களத்தின் ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளவும்.

189 துட்டுகெமுணு வீதி, கொஹுவலை
(+94) 11 2890809 | student.services@cts.lk | www.cts.lk